**In the Court of the Subordinate Judge, Srivaikundam.**

Case.No.MCOP.4/2025

Deposition of P.W. 2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. இசக்கிமுத்து |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of April 2026

**முதல்விசாரணை :**

மசா.2 முதல் விசாரணை பிரமான வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன், என் தரப்பு பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், இதில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான், இதில் உள்ள சங்கதிகளை படித்துப்பார்த்துதான் கையெழுத்து செய்தேன். ஆவணங்கள் தாக்கல் இல்லை. மனுப்படி உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை**

நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்காக மனுதாரர் என்னை அழைத்து வந்தார். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்து 24.09.2019ம் தேதி நடந்தது. விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் போலீசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை, நான் எதிலும் கையொப்பம் செய்யவில்லை. வழக்கில் இறந்துபோன காமராஜ் எனக்கு உறவினர். முதல்விசாரணை சாட்சியத்தில் சங்கதிகளை நான்சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்தார். விபத்தில் இறந்துபோன காமராஜ் விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து வந்து வடக்கிற்கு திரும்பினார். விபத்து ஏற்படுத்திய வாகனம் தெற்கிலிருந்து வடக்கு

நோக்கி வந்தது.  இறந்துபோன காமராஜ் கொடுத்த புகார் தான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பொழுது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த வண்டி மோதி விபத்து ஏற்படுத்திய சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.  இறந்துபோன காமராஜ் சாலையில் வாகனம் வருவதை கவனிக்காமல் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கடந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல.  நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், இறந்து போனவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவத்தை நேரில் பாரத்திருந்தால் குற்றவழக்கில் போலீசார் என்னை சாட்சியாக காண்பித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.04.17 15:56:00 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**